மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 18.11.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

24) சிந்தாமணியூர் தார்சாலை வடக்கு-தெற்காக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தார் சாலையிலிருந்து மேற்குபுறமாகத்தான் ச.எண்கள்.248/1A3, 248/1A1, 248/1A2, 248/1B ஆகியவை உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 க்கும், மற்ற மூன்று சர்வே எண்களுக்கும் இடையில் தென்வடலாக ஒரு கல்கரை உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A1 க்கு தெற்காக ச.எண். 248/1A2 வும், அதற்கு தெற்காக ச.எண்.248/1B ம் உள்ளது என்றால், சரிதான்.

25) ச.எண்.248/1A3 ல் பெரியண்ணனின் கூரை வீடும், மேற்படி கூரை வீட்டிற்கு தெற்காக அதே சர்வே எண்ணில் என்னுடைய தொகுப்பு வீடும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி தென்வடல் கல்கரைக்கு மேற்காக தென்புற மூலையில் பாதைக்கு வடக்காக என் கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பாதை வழியாகத்தான் என் வீட்டிற்கு சென்று வருகிறேன் என்றால், சரிதான்._ என் வீட்டிற்கு வடகிழக்கில் சுப்ரமணியம் என்பவரின் வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி சுப்ரமணியம் என்பவரது வில்லை வீட்டிற்கு வடக்கில் பெரியண்ணன் என்பவரது வில்லை வீடு உள்ளது என்றால், மேற்படி வில்லை வீட்டிற்கு மேற்குபுறமாக மேற்படி பெரியண்ணன் என்பவருக்கே மற்றொரு வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான்.

26) மேற்படி பெரியண்ணனுக்கு பாத்தியப்பட்ட வில்லை வீடுகளில் கிழபுறமுள்ள வீட்டிற்கு கிழபுறம் தலைவாசலும், மற்றொரு வீட்டிற்கு தென்புற தலைவாசலும் உள்ளது என்றால், சரிதான். சுப்ரமணியம் என்பவரது வில்லை வீட்டிற்கு கிழபுற தலைவாசல்தான் உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 ல் உள்ள என்னுடைய கூரைவீட்டிற்கு எந்த புறம் வாசல் என்றால், அதற்கும் கிழபுறம் தான் வாசல் உள்ளது. என் தொகுப்பு வீட்டிற்கு எந்த புறம் வாசல் என்றால், அதற்கும் கிழபுறம் தான்

தலைவாசல் உள்ளது. ச.எண்.248/1A2 ல் கந்தசாமியின் கூரை வீடு மட்டும் தான் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டிற்கும் கிழபுறம் தான் தலைவாசல் என்றால், சரியல்ல. அதற்கு தெற்குபுறம் தான் தலைவாசல் உள்ளது. மேற்படி ச.எண்.248/1A2 ற்கு வடபுறம் ச.எண்.248/1A1 ல் குழந்தைபையனின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டை ஒட்டி கிழபுறம் ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி தொகுப்பு வீட்டிற்கும் கிழபுறம் தான் வாசல் என்றால், சரிதான்.

27) மேற்படி குழந்தைபையனின் தொகுப்பு வீட்டிற்கு வடபுறம் ஆறுமுகத்தின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி தொகுப்பு வீட்டை ஒட்டி மேற்குபுறத்தில் அதே ஆறுமுகத்திற்கு ஓட்டு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி இரு வீடுகளுக்கும் தலைவாசல் கிழக்குபுறம் அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆறுமுகத்தின் தொகுப்பு வீட்டிற்கு வடபுறம் பழனியின் கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பழனி வீட்டிற்கு மேற்குபுறத்தில் அதே பழனிக்கு பாத்தியப்பட்ட சிமெண்ட் அட்டை போட்ட வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பழனிக்கு பாத்தியப்பட்ட இரு வீடுகளுக்கும் கிழக்குபுறம் தான் தலைவாசல் உள்ளது என்றால், சரிதான். (சாட்சி தற்போது தெற்குபுறம் உள்ளதாக கூறுகிறார்.)

28) மேற்படி அனைத்து நபர்களும் தங்களது வீடுகளிலிருந்து கிழபுறமாக வந்து, பின் மீண்டும் தெற்குபுறமாக சென்று, மீண்டும் கிழபுறமாக சென்றால்தான் தென்வடலாக செல்லும் சிந்தாமணியூர் தார் சாலையை அடைய முடியும் என்றால், அவரவர்கள் வழியிலிருந்து நேரடியாக செல்லலாம். மேலும் வடக்குபுறமாக சென்று, மேற்படி தார்சாலையை அடையலாம். ச.எண்.248/1A1, ச.எண்.248/1A3 ன் வடக்கு புறமாக என்ன சர்வே எண் அமைந்துள்ளது என்றால், அந்த சர்வே எண் எனக்கு தெரியவில்லை.

29) ச.எண்.248/1A2 ல் உள்ள கந்தசாமி எந்த சர்வே எண் வழியாக மேற்படி சிந்தாமணியூர் தார்சாலையை அடைய முடியும் என்றால், மேற்படி ச.எண்.248/1A2 ன்

கிழபுறமாக உள்ள 0.53–1/4 சென்ட் பழனி நிலம் வழியாக கிழபுறமுள்ள தார்சாலையை அடையலாம். மேற்படி ச.எண்.248/1A2 விற்கு தென்புறமாக உள்ள ச.எண்.248/1B ல் உள்ள நபர்கள் எவ்வாறு மேற்படி சிந்தாமணியூர் ரோட்டை அடைவார்கள் என்றால், அவர்களும் கிழபுறமாக உள்ள ச.எண்.248/1A3 ல் உள்ள மேற்படி நிலத்தின் வழியாகத்தான் செல்ல இயலும்.

30) மேற்படி தென்வடல் கல்கரைக்கு மேற்குபுறமாக ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகியவை தான் உள்ளது என்றால், சரிதான். மேற்படி மூன்று சர்வே எண்களில் உள்ளவர்கள் தென்புறமாக உள்ள 10 அடி மண் பாதையை அடைவதற்கு மேற்படி மூன்று சர்வே எண்களையும் ஒட்டி கிழக்குபுறமாக சுமார் 4 அடி அகல மண் பாதை உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி மூன்று சர்வே எண்களுக்கும் தென்புறமாக உள்ள 10 அடி மண்பாதை எங்கிருந்து எங்கு செல்கிறது என்றால், கிழமேலாக சுமார் 50 அடி தூரம் செல்கிறது. எங்கிருந்து எங்கு செல்கிறது என்றால், சிந்தாமணியூர் ரோட்டில் தொடங்கி ச.எண்.248/1B ன் தென்புறமாக முடிகிறது.

31) மேற்படி கிழமேல் 10 அடி மண் பாதை ஆதியிலிருந்து உள்ளது என்றால், இல்லை. நாங்களாக பார்த்து அமைத்துக்கொண்டது. மேற்படி கிழபுறமுள்ள ச.எண்.248/1A3 க்கும், மேற்குபுறமுள்ள ச.எண்.248/1A1 க்கும் வடக்குபுறத்தில் அது போன்று ஏதேனும் மண்பாதை உள்ளதா என்றால், உள்ளது. மேற்படி வடபுறமுள்ள நிலம் யாருடையது என்றால், சித்தன் என்பவருடையது. மேற்படி சித்தன் என்பவரின் தந்தை பெயர் என்னவென்றால், மந்தி (எ) காவேரி ஆகும். மேற்படி வடபுறமுள்ளதாக சொல்லும் மண்பாதை வழியாக சிந்தாமணியூர் ரோட்டிற்கு நாங்கள் சென்று வருகிறோம் என் எங்கள் பதிலுரையிலோ, நாங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.341/2015 என்ற வழக்கிலோ அல்லது இவ்வழக்கில் என் முதல்விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளோமா என்றால், சொல்லியுள்ளோம். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நாங்கள் குறிப்பாக சொல்லவில்லை என்றாலும், சரியல்ல.

32) ச.எண்கள்.248/1B மற்றும் ச.எண்.248/1A3 க்கு நடுவில் கிழமேலாக 4 அடி அகல மண்பாதையின் வழியாக சென்று, தென்புறமுள்ள 10 அடி அகல மண்பாதையை அடைந்து, அதிலிருந்து கிழபுறமாக சென்று சிந்தாமணியூர் செல்லும் தார் சாலையை நாங்கள் பயன்படுத்திவரும் நிலையில், அவ்வாறு மேற்படி சர்வே எண்களுக்க வடபுறமாக உள்ள ஒரு மண்பாதை சிந்தாமணியூர் தார்சாலைக்கு செல்வதாக நாங்கள் சொல்வது ஏற்கத்தக்கதல்ல என நாங்கள் சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

33) ச.எண்.248/1B ல் உள்ள நாங்கள் மேற்படி தார்சாலைக்கு எவ்வாறு செல்வோம் என்றால், கிழபுறமுள்ள எங்களது நிலத்தின் வழியாக செல்வோம். வேறு மாற்று வழி உள்ளதா என்றால், வடக்குபுறமாக சித்தன் நிலத்திலுள்ள பாதை வழியாக கிழபுறமாக சென்று, சிந்தாமணியூர் தார்சாலையை அடையலாம். அவ்வாறெனில் ச.எண்.248/1B ல் உள்ள நாங்கள் எவ்வாறு சித்தன் நிலத்தில் உள்ளதாக சொல்லும் மண் பாதைக்கு செல்வோம் என்றால், எங்களுக்கு வடபுறமாக உள்ள ச.எண்.248/1A2 ல் நுழைந்து, அதற்கு வடபுறமாக உள்ள ச.எண்.248/1A1 ல் நுழைந்து, பின்பு வடபுறம் உள்ள சித்தன் நிலத்தின் வழியாக உள்ள கிழமேல் மண் பாதை வழியாக சிந்தாமணியூர் தார்சாலைக்கு செல்வோம்.

34) நான் சொல்வது போல் அவ்வாறு வடபுறத்தில் எவ்வித பாதையும் இல்லை என்றாலும், ச.எண்.248/1B ன் கிழபுறமாகவும், ச.எண்.248/1A3 ன் மேற்குபுறமாகவும், மேற்படி இரு சர்வே எண்களுக்கு நடுவில் உள்ள 4 அடி தென்வடல் மண்பாதை வழியாக சென்று, 10 அடி அகல கிழமேல் மண் பாதையை அடைந்து, பின் கிழபுறமாக சென்றால்தான் தென்வடல் சிந்தாமணியூர் தார்சாலையை அடைய இயலும் என்றால், சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மேற்படி 4 அடி தென்வடல் மண்பாதையை கல், முட்கள் ஆகியவை போட்டு அடைத்துவிட்டோம் என்றால், அவ்வாறு நாங்கள் எதுவும் செய்யவில்லை.

35) மேற்படி ச.எண்கள்.248/1A1, 248/1A2, 248/1B ஆகியவற்றின் கிழபுறமுள்ள தென்வடல் கல்கரை மேற்படி மூன்று சர்வே எண்களுக்கும் தொடர்ந்து உள்ளதா

அல்லது ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் இடையில் கிழமேலாக பாதை செல்வதற்காக ஏதேனும் இடைவெளி விடப்பட்டுள்ளதா என்றால், அவ்வாறு இடைவெளி எதுவும் இல்லை. மேற்படி மந்தி (எ) காவேரி என்பவர் தான் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு மூதாதையர் என்றால், சரிதான்.

36) இவ்வழக்கிலுள்ள வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு ச.எண்.248/1A1 மற்றும் ச.எண்.248/1A3 க்கு வடக்குபுறமாக நிலம் எதுவும் இல்லை என்றால், சரிதான். பெரியண்ணன், சண்முகம், மணிகண்டன் ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்றால், சரிதான். வாதி பழனி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா தடவழியை நாங்கள் தடுத்து, பிரச்சனை செய்து, அவரை தாக்கியதாக புகார் அளித்து அதனடிப்படையில் எங்கள் பெயரில், மேச்சேரி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான்.

37) அவ்வாறு நாங்கள் தாவா தடவழியை பயன்படுத்த கூடாது என பிரச்சனை செய்ததால்தான் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால், சரியல்ல. சர்வேயர் எங்கள் நிலத்தை அளக்க வந்தார். அதை பழனி வகையறா தடுத்துவிட்டார்கள். அதனால்தான் பிரச்சனை ஆனது. வாதிகள் எங்கள் நிலத்தை அளக்க விடாமல், தடுத்ததால்தான் நாங்கள் தாவா தடவழியில் வாதிகள் செல்லக்கூடாது என் இடையூறு செய்கிறீர்களா என்றால், இல்லை. மேற்படி சர்வேயர் அளக்க வந்ததை தடுத்துவிட்டதாக எங்கள் பதிலுரையிலோ, என் முதல் விசாரணை சாட்சியத்திலோ நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.341/2015 என்ற வழக்கிலோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும், தற்போது இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

38) வாதிகள் இவ்வழக்கை 2013 ம் வருடத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில், 2 ஆண்டுகள் கழித்து 2015 ம் வருடத்தில் நாங்கள் எதற்காக தனி வழக்கு தாக்கல்

செய்ய நேர்ந்தது என்றால், முன்பே என் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு தாக்கல் செய்ய உத்தேசித்திருந்தோம். அதற்குள் என் அண்ணனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், தாமதமாக தாக்கல் செய்தோம். யாருக்கு உடல்நிலை சரியில்லை என்றால், என் மூத்த சகோதரர் பெரியண்ணனுக்கு உடல்நிலை சரியில்லை. அவ்வாறு அவருக்கு உடல் நிலை சரியில்லாததால்தான் தாமதமாக நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம் என்ற சங்கதியை மேற்படி வழக்கிலோ, தற்போது இவ்வழக்கின் பதிலுரையிலோ, என் முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

39) அ.வ.எண்.341/2015 என்ற வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால், வாதிகளுக்கு தடம் எதுவும் இல்லை என கூறி போட்டோம். நான் சொல்வதுபோல் என் மூத்த சகோதரருக்கு உடல் நிலை சரியில்லை என நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்பது குறித்தே தெரியாமல் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

40) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் அறிக்கையிலும், வழக்கு சங்கதிகளையும் முறியடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ததற்கு ஆட்சேபனை தாக்கல் செய்யாமலும், மேற்படி ஆணையரின் அறிக்கையை நீக்கறவு செய்யாத நிலையிலும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையரின் அறிக்கைக்கு முரணாக வேறொரு அமைப்புகளுடன் நாங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.341/2015 வழக்கில் ஒரு அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

41) தாவா தடவழி நிலையில் உள்ளது என்றாலும், தாவா தடவழியை மறிக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், தாவா தடவழியை தவிர

வாதிகளுக்கு சிந்தாமணியூர் தார்சாலையை அடைவதற்கு வேறு மாற்று தடவழி இல்லை என்றாலும், அதனால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.